வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

ISO9001:2015, ISO 14001 : 2015, OHSAS 18001:2007 & ISPS Compliant Port

SAGARMALA
PORT-LED PROSPERITY

Press Release No: 21 date: 01.06.2020

**V.O. Chidambaranar Port gears up to receive Indian nationals from other countries**

Indian Navy Ships are repatriating Indian nationals stranded abroad due to COVID-19 Pandemic under the Government of India's 'Operation Samudra Setu' ("Sea Bridge").

The first batch of Indian evacuees are arriving Tuticorin from Srilanka through V.O. Chidambaranar Port on 02.06.2020 after an international lockdown on all modes of transport against the COVID-19 pandemic.

In order to complete the disembarkation process in a seamless manner, preparatory exercises to coordinate among different agencies like District Administration, Customs, Port Health Organisation (PHO), Immigration, Indian Navy were organised by the Port on 01.06.2020, 30.05.2020 and 29.05.2020.



Shri T.K. Ramachandran, I.A.S, Chairman, V.O. Chidambaranar Port Trust, Shri Sandeep Nanduri, I.A.S., District Collector, Shri Arun Balagopalan, I.P.S., Superintendent of Police, Shri Bimal Kumar Jha, Deputy Chairman, V.O. Chidambaranar Port Trust, Shri B. Vishnu Chandran, I.A.S, Additional Collector, along with the officials concerned visited the designated berth and passenger terminal and reviewed the arrangements made.

Before the disembarkation process, the PHO would completely screen all the passengers on board. On completion of the screening process, the passenger will be disembarked, PPE kits will be issued to all the passengers and the luggages of the passengers will be disinfected by the Port authority. On completion of the above process, the passengers will be transited from the berth to the passenger terminal by buses arranged by district administration.

On arrival at the passenger terminal, the antecedents of the passengers will be checked and they will be insisted to download and configure ‘Aarogya Setu’ app in their smartphones. Then, the Customs and immigration formalities will be completed and the passengers will be guided to respective buses.

In order to complete the Customs and immigration formalities in a seamless manner, the Port has made all arrangements in the Port’s Berth No.14 and passenger terminal. Breakfast and Lunch for all the passengers have been jointly arranged by Port authority and district administration.

In view of the unique challenges associated with COVID-19, the Port and District Administration along with Indian Navy, Customs, Immigration, Port Health Organisation have formulated stringent Standard Operating Procedure (SOP) for disembarkation of expatriates.

The above details were released in the Press Release by V. O. Chidambaranar Port Trust, today.

PUBLIC RELATIONS OFFICER

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
ISO9001:2015, ISO 14001 : 2015, OHSAS 18001:2007 & ISPS Compliant Port
SAGARMALA PORT-LED PROSPERITY
(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

பத்திரிக்கை செய்தி எண் : 21 தேதி :01.06.2020

**வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் மார்க்கமாக வெளிநாடுகளிலுள்ள இந்தியர்களை கப்பலின் மூலம் தாயகம் திரும்ப அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளது**

கொரோனா தொற்றின் காரணமாக வெளிநாடுகளில் தவித்து வரும் இந்திய குடிமக்களை தாயகத்திற்கு அழைத்து வரும் முயற்சியாக இந்திய அரசு 'சமுத்திர சேது' என்ற திட்டத்தின்கீழ் கப்பகளின் வாயிலாக தாயகம் அழைத்து வருகிறது.

கொரோனா தொற்றின் காரணமாக சர்வதேச எல்லைகள் முடப்பட்டமையால் அனைத்து வழி போக்குவரத்தும் முடங்கியுள்ள இச்சூழலில் முதற்கட்டமாக இலங்கையில் தவித்து வரும் இந்திய குடிமக்களை 02.06.2020 அன்று தூத்துக்குடியிலுள்ள வ.உ.சிதம்பரனார் துறைமுகத்திற்கு அழைத்து வர இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம், சுஙகத்துறை, துறைமுக சுகாதார அமைப்பு (PHO), குடியுரிமைதுறை, இந்திய கடற்படை ஆகிய துறைகள் வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத்துடன் இணைந்து தூத்துக்குடி வரும் இந்தியர்களை இறக்குவதற்குகான அனைத்து நடவடிக்கைகளையும் தடையில்லாமல் மேற்கொள்ள, 01.06.2020, 30.05.2020 மற்றும் 29.05.2020 ஆகிய நாட்களில் ஆய்வு பணிகளை மேற்கொண்டனர்.



திரு. தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப. வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழக தலைவர், திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம், திரு. அருண் பாலகோபாலன், இ.கா.ப. காவல்துறை கண்காணிப்பாளர், தூத்துக்குடி மாவட்டம், திரு. பிமல்குமார் ஜா, வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத் துணைதலைவர், திரு. பி. விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர் (கூடுதல் பொறுப்பு), தூத்துக்குடி மாவட்டம் ஆகியோர் பயணிகள் இறங்க கூடிய கப்பல்தளம் மற்றும் பயணிகள் முனையத்தில் பார்வையிட்டு ஏற்பாடுகளை குறித்து மதிபாய்வு செய்தார்கள்,

இந்த கப்பலில் வரும் அனைத்து பயணிகளும் துறைமுக சுகாதார அமைப்பின் மூலம் முழு பரிசோதனைகுட்படுத்தப்பட்டு பின்பே கப்பலைவிட்டு இறக்கப்படுவார்கள். பரிசோதனை முடிவடைந்த பிறகு வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் மூலம் அனைத்து பயணிகளுக்கும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை (PPE kits) வழங்கி, பயணிகளின் சமான்கள் கிருமிநாசினி தெளிக்கப்பட்டு பின்பு தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ள பேருந்தின் மூலம் பயணிகள் முனையத்திற்கு அழைத்து செல்லப்படுவர்.

பயணிகள் முனையத்திற்கு பயணிகள் வந்தவுடன் பயணிகள் எண்ணிக்கை சரிபார்க்கப்பட்ட பின்பு பயணிகள் கைபேசியில் 'ஆரோக்கிய சேது' செயலியை பதிவியிறக்கம் செய்து செயல்படுத்த வலியுறுத்தப்படுவார்கள். அதன் பிறகு பயணிகள் சுங்கதுறை மற்றும் குடியுரிமை துறையின் அனைத்து விதிமுறைகளின்படி சரிபார்க்கப்பட்டு பின்பு பயணிகள் பேருந்தில் அனுப்பி வைக்கப்படுவார்கள்.

சுங்கதுறை மற்றும் குடியுரிமைதுறையினர் தங்களது பணிகளை செய்வதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் கப்பல்தளம் 14 மற்றும் பயணிகள் முனையத்திலும் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் செய்துள்ளது. மேலும் பயணிகளுக்கு காலை உணவு மற்றும் மதிய உணவினை வ.உ.சிதம்பரனார் துறைமுகம் மற்றும் தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

வ.உ.சிதம்பரனார் துறைமுகம் வாயிலாக வெளிநாடுகளிலுள்ள இந்தியர்களை கப்பலின் மூலம் தாயகம் திரும்புவதற்குகான பிரத்தியோக நிலையான இயக்கமுறையினை வ.உ.சிதம்பரனார் துறைமுகம், தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம், இந்திய கடற்படை, சுங்கதுறை, குடியேற்றத்துறை மற்றும் துறைமுக சுகாதார அமைப்பு ஆகிய நிர்வாகங்களுடன் கலந்து ஆலோசித்து வடிமைத்து செயல்படுத்த உள்ளது.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுகபொறுப்புக் கழகம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி